# தொழிலாளர் நீதிமன்றம், உதகமண்டலம்

C.P.No.1/2026 நாள்: 08.07.2026

தொ.சா.1– திரு.R.செந்தில்குமார் இன்று 08.07.2026 எதிர்மனுதாரர் / நிர்வாக தரப்பு தரப்பில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைதொடர்ந்து செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு தமிழ்நாடு மின்வாரியத்தால் எதிர்மனுதாரரின் ஆலைக்கு வழங்கிவந்த மின்சாரத்தை துண்டித்தற்காக 28.06.2018–ல் பிறப்பித்த உத்தரவு என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் எதிர்மனுதாரரின் ஆலைக்கு உற்பத்தி எதுவும் செய்யக்கூடாது என்று தெரிவித்து 28.06.2018–ல் பிறப்பித்த உத்தரவு என்றால் எனக்கு தெரியாது. 10.07.2018 அன்று நிர்வாகம் தற்போது என்னிடம்காண்பிக்கப்படும் அறிவிப்பு ஆலை வளாகத்தில் உள்ள நோட்டீஸ் போர்டில் தொழிற்சாலையை இயக்க முடியவில்லை என்றும் அதனால்வேலை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தது என்றால் இல்லை. 28.06.2018 முதல் இன்று வரை அந்த ஆலையில் நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரி, நிர்வாகம் எனக்கு வேலை கொடுக்காததால் என்னால் வேலை செய்ய இயலவில்லை. அதனால் எதிர்மனுதாரர் நிர்வாகம் எனக்கு அங்கு வேலை வழங்க இயலவில்லை என்று தெரிவித்து பரோடாவில் உள்ள அவர்களது ஆலைக்கு 22.10.2024 தேதியில் என்னை பணிமாற்றம் செய்தார்கள் என்பது சரி. நான் அதனை ஏற்றுக்கொண்டு இன்று வரை

8/7/2026.

அங்கு சென்று பணி ஏற்கவில்லை என்பது சரி, அது தவறான உத்தரவு என்பதால் நான் அதை ஏற்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். அந்த பணியிடமாறுதல் உத்தரவு தவறானது என்று நானோ, என் தொழிற்சங்கமோ நிர்வாகத்திற்கு கடிதம் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, ஆனால் தொழிற்சங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளது. தொழிற்சங்கம் இது சம்பந்தமாக தொழிலாளர் உதவி ஆணையரிடம் மனு தாக்கல் செய்துள்ளது. இதை தெரிவிக்கும் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பது சரி.

எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்தகராறு சட்டம் பிரிவு 25 (O) ன் படி அரசாங்கத்திற்கு ஆலை மூடுவது தொடர்பாக அனுமதி வேண்டி விண்ணப்பித்து அதன் அடிப்படையில் அரசாங்கம் 09.09.2024 தேதியிட்டு தற்போது என்னிடம் காட்டப்படும் ஆணையை பிறப்பித்தது என்றால் தவறு. இந்த உத்தரவை என்தரப்பில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. அதனை ஆட்சேபித்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. No work No Pay என்ற அடிப்படையில் எனக்கு நிர்வாகம் எந்த ஊதியமும் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் தவறு. அப்படியிருப்பினும் நிர்வாகம் எங்களுக்கு 2022 அக்டோபர் வரை50% ஊதியம் வழங்கிவந்தது என்பது சரி. நிர்வாகம் எந்த விதிகளையும் மீறவில்லை என்றும், அதனால் நிர்வாகம் எந்த தொகையும் எங்களுக்கு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றும் சொன்னால் தவறு.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

8/7/2026.

Taken down by me in open court read over./ interpreted to the witness and acknowledged by him/her to be correct

Presiding Officer (FAC)
Labour Court
Udhagamandalam